

முத்தமிழறிஞர் பதிப்பகம் சார்பில், தி.மு.க. 75 அறிவுத்திருவிழாவில் வெளியிடப்பட்ட 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று நேரில் வழங்கினார்.



தி.மு.கழகத்தின் 75 ஆண்டுகால பன்முக நோக்கில் விளக்கும், 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூல் வெளிவர உறுதுணையாக இருந்த திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்களை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். கழக வரலாற்றில், இப்படி ஒரு ஆவணம் இதுவரை வெளிவந்ததில்லை என்று பாராட்டிய அவர், அடுத்து மேற்கொள்ள வேண்டிய பணிகளைச் சுட்டிக்காட்டி ஆலோசனைகளும் வழங்கினார்.



`காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூல் ஆலோசனைக் குழு உறுப்பினர்களுள் ஒருவராக செயல்பட்டு, நூல் சிறப்புற வெளிவர காரணமாக இருந்த மூத்த பத்திரிகையாளர் விஜயசங்கர் அவர்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். எவ்வகையில் எல்லாம் இந்நூல் தனித்துவமானது என்பதை எடுத்துக்கூறிய அவர், கழகத்தின் அறிவுச் செயல்பாடுகளுக்கு எப்போதும் துணை நிற்பதாக உறுதியளித்தார்.

### தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக

# முதலமைச்சர் கணினித் தமிழ் விருது!

## டிச.31–க்குள் விண்ணப்பிக்கலாம்!

சென்னை, நவ.14-

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புக்களைக் கொண்டு, சீரிளமையோடு இயங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் அளித்து, அவர்தம் தொண்டுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப, உலகமெலாம் கணினி வழித் தமிழ் மொழி பரவச் செய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக முதலமைச்சர் கணினித் தமிழ் விருது என்ற பெயரில் 2013ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இவ்விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் 2 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படுகிறது.

2025ஆம் ஆண்டுக்குரிய முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு தனியர் மற்றும் நிறுவனத்திடமிருந்து, தமிழ் வளர்ச்சிக்கான மென்பொருள்கள் / செயலிகள் வரவேற்கப்படுகின்றன. விருதுக்கு அனுப்பப்படவுள்ள மென்பொருள்கள் போட்டிக்குரிய ஆண்டிற்கு முந்தைய மூன்றாண்டுக்குள் தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் (www.tamilvalarchithurai.tn.gov.in) இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை - 600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாக 31.12.2025 ஆம் நாளுக்குள் உரிய ஆவணங்களோடு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044 - 28190412, 044 - 28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (31.12.2025) பெறப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை நினைவிற் கொள்ள கனிவுடன் வேண்டுகின்றோம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யு.பி.எஸ்.சி. குடிமைப் பணிகள் நேர்முகத் தேர்வில் பங்கேற்கும்

# ஆர்வலர்களுக்கான ஊக்கத் தொகைத் திட்டம் அறிவிப்பு!

## நவ.24–ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்!

சென்னை, நவ.14-

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது துணை முதலமைச்சர் அவர்களால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது. அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில் 2025-2026-க்கான தமிழ் நாடு அரசின் பட்ஜெட் உரையில், ஒன்றிய குடிமைப் பணி தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை உயர்த்திட, ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு, அவர்கள் முதல்நிலை தேர்வுகளுக்கு தயாராகும் வகையில், 10 மாதங்களுக்கு, மாதம் 7,500 ரூபாயும், முதல் நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 25,000 ரூபாயும், ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது எனவும், இதைத் தொடர்ந்து, முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்று நேர்முகத் தேர்விற்குத் தயாராகும் இளைஞர்களுக்கு 50,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் எனவும், இத்திட்டம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப் படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 2025-ஆம் ஆண்டின் யு.பி.எஸ்.சி முதல் நிலை தேர்வில் (25.05.2025) தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 659 மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக 25,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது. தற்போது, (11.11.2025) யு.பி.எஸ்.சி குடிமைப் பணிகள் முதன்மைத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. இதில், நான் முதல்வன் யு.பி.எஸ்.சி குடிமைப் பணிகள் முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகை பெற்ற 659 பயனாளிகளில், 155 பேர் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களில் 87 பேர் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு மையத்தில் பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து, 2025-ஆம் ஆண்டின் யு.பி.எஸ்.சி முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்வலர்களுக்கு நேர்முகத் தேர்விற்கான பயிற்சி பெற தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக 50,000 ரூபாய் ஊக்கத்தொகையாக நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

இந்த ஊக்கத்தொகையைப் பெறுவதற்கு நடப்பு ஆண்டில் (2025) யு.பி.எஸ்.சி குடிமைப் பணிகள் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் https://naanmudhalvan.tn.gov.in/ என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவிக்கையைப் படித்து பார்த்து, 13.11.2025 முதல் 24.11.2025 வரை விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

### 2025 – 2026 ஆம் கல்வியாண்டிற்கான

# தொல் குடியினர் புத்தாய்வுத் திட்டம்!

## விண்ணப்பங்களை வரவேற்க புதிய இணையதளம் உருவாக்கம்!

சென்னை, நவ.14-

இளங்கலை / முதுகலை / முனைவர் பட்டம் / முனைவர் பட்ட மேலாய்வாளர் போன்ற வல்லுநர்களின் திறமைகளைப் பயன்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு"தொல்குடியினர் புத்தாய்வுத்திட்டம்" என்ற திட்டத்தினை 2024-2025 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தகுதி பெற மாணாக்கர்களின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.8.00 இலட்சத்திற்குள் இருத்தல் வேண்டும் மற்றும்மாணாக்கர் தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சி மற்றும்ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும்.

இளங்கலை மற்றும் முதுகலை மாணாக்கருக்கு மாதம் ரூ.10,000 வீதம் (6 மாதத்திற்கும்) முனைவர் பட்டம்/முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கு மாதம்ரூ.25,000 வீதம் (3 வருடத்திற்கும்) உதவித்தொகையாக வழங்கப்படும்.

2025-2026 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்க புதிய இணையதளம் "fellowship.tntwd.org.in" உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கான நெறிமுறைகளை இவ்வி ணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2025 - 2026 ஆம் கல்வியாண்டிற்கு தொல்குடியினர் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் 12.11.2025 நாளிலிருந்து 12.12.2025 நாள் வரை இணையதளம் மூலம் வரவேற்கப்படுகின்றன. மாணாக்கர்கள் மேற்காணும் திட்டத்தினை தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### ஈரோடு தெற்கு மாவட்ட

# மாணவரணி துணை அமைப்பாளர் சி.ஏ.கார்த்திகேயன் திருமண விழா!

## அமைச்சர் சு.முத்துசாமி - வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வாழ்த்துரை!

ஈரோடு, நவ. 14-

கழக தலைவரும், முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் ஈரோடு தெற்கு மாவட்டம், மாநகர பிரதிநிதி அம்பேத்கர் - அ.சித்ரா ஆகியோரின் மகனும் ஈரோடு தெற்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளருமான சிஏ.கார்த்திகே



யன், கே.ராஜேந்திரன்-ஆர்.ஜோதிமணி ஆகியோரின் மகள் ஆர்.கண்மணி ஆகியோரின் திருமண விழா (ஐப்பசி மாதம் 30 நாள்) 16-11-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு மேல் 8.45 மணிக்குள் கரூர் பஸ்நிலையம் அருகில் உள்ள சரஸ்வதி வெங்கட்ராமன் ஏசி மஹாலில் நடைபெற உள்ளது.

திருமண விழாவில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி, கரூர் மாவட்டக் கழக செயலாளரும், மேற்கு மண்டலப் பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

மேலும் ஈரோடு மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம், நாடாளுமன்ற, சட்டமன்ற, மாமன்ற உறுப்பினர்கள், ஈரோடு தெற்கு மாவட்டம், கரூர் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், ஆன்றோர், சான்றோர்கள் உள்ளிட்ட பலர் மணமக்களை வாழ்த்துகின்றனர்.



திருச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் .கே. என்.நேரு அவர்கள் மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் நவலூர் குட்டப்பட்டு ஊராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூபாய் 119.22 கோடி மதிப்பீட்டில் மணிகண்டம் மற்றும் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 174 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் வே.சரவணன் , தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் ஜி. எஸ்.சமீரன் ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் மொ. பழனியாண்டி. என். ஜெயக்குமார், மணிகண்டம் திருமதி கமலம் கருப்பையா. ச. துரைராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி. கங்காதாரணி, அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து

# புதுக்கோட்டையில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

புதுக்கோட்டை, நவ.14–

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண் டித்து மதச் சார்பற்ற முற் போக்கு கூட்டணி சார்பில் நவம்பர் 11 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை புதுக்கோட்டை அண்ணா சிலை பின்புறம் உள்ள டாக்ஸி ஸ்டாண்ட் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மதச் சார்பற்ற கூட்டணி கட்சி தலைவர்கள், செயலாளர்கள், சங்கர் சிபிஎம், செங்கோடன் சிபிஐ, எஸ்.கே.கலியமூர்த்தி மதிமுக, அறிவொளி திக, வெள்ளை நெஞ்சன் விசிக, அஸ்ரப் அலி முஸ்லிம் லீக், அப்துல் கனி மனித நேய மக்கள் கட்சி, ராஜகோபால் ம.நீ.ம, அப்துல் ஜப்பார் ஆம் ஆத்மி, ரியாஸ் அகம்மது ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். ஆர்ப்பாட்டத்தில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, உதயம் சண்முகம், கார்த்திக் தொண்டைமான், மாநில, மாவட்ட நிர்வாகிகள்

த.சந்திரசேகரன், சுப.சரவணன், கே.ஆர்.என்.போஸ், செ. அசோக்பாண்டியன், அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன், க.மதியழகன், ஞான. இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், கீரை.தமிழ் ராஜா, சு.சண்முகம், இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், ஆர்.ஆர்.கே.கலைமணி, எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், க.ராஜேந்திரன்,

ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், வெ. முத்துக்கிருஷ்ணன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, மு.பி.ம. சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ. எஸ்.வெங்கடாச்சலம். அ.இளங்குமரன், ஆர்.ஆர்.சாமிநாதன், சி.சண்முகம், கே.பி.அய்யப்பன், கோவிந்தராஜ்,

சக்தி ராமசாமி, வே.பொன்துரை, பொன்.கணேசன், பொன். ராமலிங்கம், கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், அ.முத்து, அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், இரா.கணேசன வி.ஆர்.இளையராஜா, கே.எஸ்.ரவி, குமார்(எ) துரைக்கண்ணு, பேரூர் கழக செயலாளர்கள் பி. அண்ணாத்துரை, உமுருகேசன், வை. விஜயக்குமார், அ.அழகப்பன், கே.சி.சிவக்குமார், ஆ.பழனிக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, இராசு சந்தோஷ், எம்.செந்தில்குமார், ஆர். செல்லத்துரை, த.மணிராஜன், ஆர். வி.செல்வம், வீரய்யா, கே.எம்.சுப்பிரமணியன், கலைவாணி சுப்பிரமணியன், ரா.கருப்பையா, அ.ரெத்தினம்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எம்.வேலுச்சாமி, டாக்டர் செ.குறிஞ்சிவாணன், வி.ஜி.ஆர். மணிவண்ணன், வி.என்.எம்.பாலு, கவிவேந்தன், டி. எம்.ஆர்.ராமமூர்த்தி, என்.வீரைய்யா, சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, இரா.மேகநாதன், வளர்மதி, பாத்திமா பீவி, தேவி, சக்திவேல், ஆ.கலைச்செல்வன், ஹரி விமலாதி, டாக்டர் சுதர்சன், மணிமொழி மனோகரன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, 'வெற்றிச்செல்வன், சிவ.பால இளங்கோ, மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷீத், அருண் சேகர், இரா.தமிழ்ராசு, நசுருதீன், கவிக்குமார், முகம்மது ரபீக், இளையராஜா,மேகலா முத்து, மாலா ராஜேந்திர துரை, மகேஸ்வரி சண்முகநாதன், டாக்டர் கே.என். அமானுல்லா, ராய. முத்துக்குமார், இராம.செல்வராஜ், பூங்குடி சிவா, வடவாளம் க.செ.மணிமாறன், காதர் கனி, டி.அப்புக்காளை, மா.மணிவேலன், பழனிவேலு, கி. சுப்பிரமணியன், ஆ.மரிய எட்வின், தெய்வானை, ராயல் சபா, பிரசன்னா, அண்ணாத்துரை, முரளிதரன், இதயம் அப்துல்லா, பிரேம் ஆனந்த், டான்சி ராஜேந்திரன், அலுவலகம் செ.ரமேஷ், கனகம்மன் பாபு, டி.செல்வம், கே.எம்.கே.ரவிக்குமார், எம்.ஏ.எம்.இம்தியாஸ், சுந்தர்ராஜ், தமிழ்ச்செல்வன், பிரேம் ஆனந்த், மற்றும் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசுக்கு எதிராகவும் தேர்தல் ஆணையத்திற்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்சிராப்பள்ளியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் அன்புச்சோலை மையத்தினை காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்ததைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் பிரபஞ்சம் முதியோர் இல்லத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மூத்த குடிமக்களுடன் கலந்துரையாடினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் இல.பத்மநாபன், ரஞ்சிதாதேவி, ந.ராஜேந்திரகுமார், கீர்த்தி சுப்பிரமணியம், கவிதாமணி ராஜேந்திரகுமார் உள்பட இந்நாள், முன்னாள் கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.